අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
Ministry of Education, Higher Education and Vocational Education 'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ යොමුව<br>எனது இல.<br>My Ref. | ED/17/03/01/01/01 | ඔබේ යොමුව<br>உமது இல.<br>Your Ref. | | දිනය<br>திகதி<br>Date | 2025.12.18 |

சகல மாகாண கல்விச் செயலாளர்கள்

சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்

சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள

சகல பிரிவெனாதிபதி தேரர்கள்

சகல அரச மற்றும அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் அதிபர்கள்

## 2026 புதிய கல்வி மறுசீரமைப்பை செயல்படுத்துதல்

## மேலதிக கல்வி தொகுதிகள் மற்றும் உருமாற்றத் திறன் தொகுதிகள் தொடர்பான அறிவுரை கையேடு

teachmore.lk

புதிய கல்வி சீர்திருத்தங்களை செயல்படுத்துவதற்கான முந்தைய அறிவுரை கையேடு இலக்கம் ED/17/03/01/01/01 மற்றும் 2025.10.22 ஆம் திகதிய கடிதத்திற்கு மேலானதாகும்.

கல்வியில் மாற்றத்தக்க உருமாற்றததின் மூலம் திறன் கொண்ட இலங்கையை உருவாக்கும் முகமாக, 2026 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் புதிய கல்வி சீர்திருத்தங்களின் கீழ் 6 ஆம் தரத்திலிருந்து மாணவர்களின் விருப்பம் மற்றும் ஆர்வத்திற்கு ஏற்றவாறு தெரிவுசெய்யக்கூடிய புதிய கற்றல் துறையை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கமைய. 21 ஆம் நூற்றாண்டின் திறன்களை மையமாகக் கொண்டு, பிராந்திய, தேசிய மற்றும் சர்வதேச தேவைகளுக்கு பொருத்தமான கற்றல் துறையை அடையாளம் கண்டு, அதற்கேற்றவாறு தொகுதிகளை தயாரிப்பதற்கு பாடத்திட்ட சீர்திருத்தங்களின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதன்படி, அத்தியாவசிய தொகுதிகளுடன் மேலதிக ஆய்வு மற்றும் உருமாற்றத் திறன் தொகுதிகளை வகுப்பறையில் கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்முறையின் கீழ் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நிபுணர்களின் கருத்துகள் மற்றும் முன்மொழிவுகள் தொடர்பில் கவனம் செலுத்தி, தேசிய கல்வி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட மேலதிக ஆய்வு தொகுதிகள் மற்றும் உருமாற்றத் திறன் தொகுதிகளை வகுப்பறையில் செயல்படுத்தும்போது பின்வரும் அறிவுரைகளை பின்பற்றுமாறு தெரிவிக்கிறேன்.

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk
moesecretaryoffice@gmail.com

1.மேலதிக ஆய்வுத் தொகுதிகள்

அடிப்படை பாடங்களுக்கு அப்பால் ஆர்வம் காட்டுகின்ற அல்லது உரிய பாடத்துறையை விரிவுபடுத்துவதற்கு அல்லது நிபுணத்துவம் பெறுவதற்கான வாய்ப்பை மாணவர்களுக்கு வழங்குவது இந்த மேலதிக ஆய்வுத் தொகுதிகளை அறிமுகப்படுத்தும் நோக்கமாகும். இதன்போது உயர்கல்வி வாய்ப்புகள் அல்லது தொழில்களுக்கான வழிகாட்டுதல், தேவையான திறன்களை வளர்ப்பது மற்றும் மாணவர்களின் ஆர்வத்தை நிறைவேற்றவும் எதிர்பார்க்கப்படுகிறது

I. மேலதிக தொகுதிகளை தெரிவுசெய்தல்

- 14 அத்தியாவசிய பாடங்களுக்குரியவாறு மேலதிக ஆய்வுத்தொகுதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஒரு மாணவருக்கு தான் விரும்பும் 03 பாடங்களின் கீழ் 03 மேலதிக ஆய்வுத் தொகுதிகளை தெரிவு செய்ய முடியும்.
- ஒரு தவணை கல்வித் திட்டம் தொடர்பாக 03 மேலதிக ஆய்வுத் தொகுதிகள் பூர்த்திசெய்ய வேண்டியதுடன், அதற்காக ஒரு மேலதிக ஆய்வுத் தொகுதிக்கு தலா 10 மணிநேர வீதம் 30 மணிநேரம் மாணவர்களுக்கு பயன்படுத்த முடியும்.
- இந்த மேலதிக ஆய்வுத் தொகுதி தொடர்பாக கிழமைக்கு 03 பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.
- முழுமைப்படுத்தப்பட்ட மேலதிக ஆய்வுத் தொகுதிகள் தொடர்பாக ஒரு தவணைக்கு 03 தொகுப்புகளை மாணவர்கள் பெறலாம்

teachmore.lk

II. 2026 ஆம் ஆணடில் 6 ஆம் தரத்திற்கு 1 தவணையிலிருந்து அறிமுகப்படுத்தப்படும் மேலதிக ஆய்வுத் தொகுதி

- 2026 ஆம் ஆண்டில் ஒரு தவணைக்கு 06 பாடங்களுக்காக 06 மேலதிக ஆய்வுத்தொகுதிகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.
- ஒவ்வொரு பாடங்கள் தொடர்பாகவும் மேலதிக ஆய்வுத் தொகுதிகளை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.
- 2026 ஆம் ஆண்டில் ஒரு தவணை தொடர்பாக அறிமுகப்படுத்தப்படும் பாடங்களுக்குரிய மேலதிக ஆய்வுத்தொகுதிகள் பின்வருமாறு அமைகின்றன

| தொடர் இலக்கம் | பாடம் | பருவம் | மேலதிக ஆய்வுத் தொகுதியின் பெயர் | மொழிமூலம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| 1. | கணிதம் | I | எண்களுடன் விளையாடுவோம் | √ | √ | √ |
| 2. | விஞ்ஞானம் | I | வினவும் மனதிற்கான பிரவேசம் | √ | √ | √ |
| 3. | வரலாறு | I | வாழ்வின் கதை | √ | √ | √ |
| 4. | இலக்கிய ரசணை | I | இலக்கிய ஊற்று | √ | √ | √ |
| 5. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | I | ஒலிசார்ந்த கோவைகளுடன் வேலை செய்வோம் | √ | √ | √ |
| 6. | வாழ்வுக்கான தொழில்நுட்பம் | I | பயன்பாட்டு தொழில்நுட்பவியல் | | | |
| | | | I. தேயிலை | √ | √ | |
| | | | II. தென்னை | √ | √ | |
| | | | III. இரத்தினங்கள் மற்றம் நகைகள் | √ | √ | |
| | | | IV. நீர்வளங்கள் | √ | √ | |
| | | | V. மின்சாரம் மற்றும் மின்னணுவியல் | √ | √ | |

teachmore.lk

- மேலதிக ஆய்வுத் தொகுதிகளை வகுப்பறையில் செயல்படுத்தும்போது பின்வரும் முறைமைகளை பின்பற்றுவது பொருத்தமாகும்.
- ஒரு கிழமைக்கு ஒதுக்கப்பட்டுள்ள 03 பாடவேளைகள் வெவ்வேறாக செயல்படவேண்டும்.
- பாடங்களுக்குரிய மேலதிக ஆய்வுத் தொகுதி 03 பகுதிகளாக பிரித்து ஒரு பாடவேளையில் இரண்டு பாடங்களுக்குரிய மேலதிக ஆய்வுத்தொகுதிகளை பயன்படுத்துவதற்கான வாய்ப்புகயை வழங்க முடியும்.

உ.ம். :- $x^{1,}$ $x^{2,}$ $x^{3,}$ $x^{4,}$ $x_5$ மற்றும் $x_6$ என பாடங்களை காட்டும்போது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| $\times_1$ | $\times_2$ | $\times_3$ | $\times_4$ | $\times_5$ | $\times_6$ |

முதலாவது பாடவேளை

| | |
|---|---|
| $x_1$ | $x_2$ |

இரண்டாவது பாடவேளை

| | |
|---|---|
| $x_3$ | $x_4$ |

மூன்றாவது பாடவேளை

| | |
|---|---|
| $x_3$ | $x_4$ |

- ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தலா ஒரு பாடம் என 03 பாடங்களை மாணவர்கள் தெரிவுசெய்ய வேண்டும்.

  உ.ம். :- $X_1$'$X_3$'$X_5$ அல்லது

  $X_2$'$X_4$'$X_6$ என்று கொள்ளலாம்

- மாணவர் எண்ணிக்கை மற்றும் ஆசிரியர் எண்ணிக்கைகளின் முடியும் பாடசாலை தேவையின்படி செயல்படுத்தக் கூடிய 06 பாடங்களுக்கு மேல் தெரிவுசெய்துக் கொள்ளலாம்.
- ஒரு பாடவேளையின்போது 02 பாடங்கள் அல்லது அதற்கு மேலான எண்ணிக்கைகளை செயல்படுத்தும்போது அதிகளவான வள பயன்படுத்தல் தொடர்பாக ஒரு பாடத்தை பயிலும் மாணவர் எண்ணக்கை குறைந்தபட்சம் 05-10 இடையில் இருப்பது பொருத்தமாகும்
- வாழ்க்கைக்கான பயன்பாட்டு தொழில்நுட்பப் பாடத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட ஐந்து தொகுதிகளில், உள்ளூர் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், மாணவர்களின் விருப்பங்களுக்கு ஏற்பவும், முதல் தவணையில் ஒரு தொகுதியைத் தெரிவு செய்யலாம். இரண்டாவது மற்றும் மூன்றாவது தவணையில், மீதமுள்ள நான்கு தொகுதிகளிலிருந்து தலா ஒரு தொகுதியைத் தெரிவு செய்யலாம்.
- ஒரு பாடவேளைக்காக 02 தொகுதிகள் அல்லது பலவற்றை செயல்படுத்தும்போது உரிய பாடம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆசிரியர்கள் அதில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

  உ.ம். :- மூன்று பாடவேளைகளில் ஒன்றில் கணிதம் மற்றும் விஞ்ஞானத்தின மேலதிக ஆய்வுத் தொகுதியை மாணவர்கள் தெரிவு செய்வார்கள் எனில் கணிதம் மற்றும் விஞ்ஞான ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும்

| | |
|---|---|
| $x_1$ | $x_2$ |

- சமாந்தர வகுப்புகள் 02 அல்லது பல இருக்கும்போது 02 அல்லது 03 வகுப்புகளை அல்லது ஒன்றாக இணைத்து இந்த பாடங்களை செயல்படுத்தலாம்.

  உ.ம். :- 6A + 6B - 4 ஆம் பாடவேலை

  6C + 6D- 6 ஆம் பாடவேலை

- பாடசாலையில் ஒரு குறிப்பிட்ட வகுப்பில் ஒரு வகுப்பு மட்டுமே இருந்தால் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் செயல்படுத்தப்பட வேண்டிய பாடங்களின் எண்ணிக்கை தெரிவுசெய்யப்பட வேண்டும்.

teachmore.lk

### 2.மாற்றத்திற்கான திறன் தொகுதிகள்

தொழில் மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான திறன்களைப் பெறுவதற்குத் தேவையான அடித்தளத்தை வழங்கி மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதி செய்வது இந்த தொகுதியை அறிமுகப்படுத்துவதன் நோக்கமாகும். இதன்போது, 21 ஆம் நூற்றாண்டின் திறன்களை உருவாக்குதல், மதிப்புகள் மற்றும் குடியுரிமையை வளர்த்தல் மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சியை ஆதரித்தல் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

#### I. மாற்றத்திறன் தொகுதிகளை தெரிவுசெய்தல்

தெரிவுசெய்யப்பட்ட பல்வேறு துறைகளில் மாற்றத்தக்க திறன் தொகுதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாணவரும் அந்த 02 துறைகளுடன் தொடர்புடைய 02 தொகுதிகளை ஆய்வுக்காக தெரிவுசெய்ய வேண்டும்.

ஒரு பருவத்தில் 02 மாற்றத்தக்க திறன் தொகுதிகள் முடிக்கப்பட வேண்டியதுடன், இதன் மூலம் மாணவர்கள் 02 கிரெடிட்களைப் பெறலாம். ஒவ்வொரு தொகுதிக்கும் 10 மணிநேரம் நேரம். ஒதுக்கப்பட்டுள்ளது 02 தொகுதிகளை பூர்த்தி செய்வதற்கு 20 மணிநேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக வாரத்திற்கு 02 பாடவேலைகள் ஒதுக்கப்பட்டுள்ளன, மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 02 பாட வேளைகளுக்கு ஒதுக்கப்பட்ட 02 பாடவேளைகளை பயன்படுத்த வேண்டும்.

#### II. மாற்றத்திறன் பாடத்துறைகள்

2026 ஆம் ஆண்டு 6 ஆம் தரத்தில் ஒரு தவணைக்கு பின்வரும் துறைகளுடன் தொடர்புடைய 2 மாற்றத்திறன் தொகுதிகள் அறிமுகப்படுத்தப்படும். எதிர்வரும் காலங்களில் பல்வேறு துறைகளுடன் தொடர்புடைய மாற்றத்திறன் தொகுதிகள் அறிமுகப்படுத்தப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

- ➢ உலகளாவிய ஆய்வு
- ➢ சமூகநல சேவைகள்

teachmore.lk

| தொடர் இலக்கம் | துறை | பருவம் | தொகுதியின் பெயர் | மொழிமூலம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| 1. | ➢ உலகளாவ ிய ஆய்வு | I | பன்முகத்தன்மையுடன் வாழ்வது. | √ | √ | √ |
| 2. | சமூகநல சேவைகள் | I | மனிதநேயப் பணி | | | |
| | | | ➢ மனநிறைவான சிரிப்பிற்கு அன்பின் கரங்கள் | √ | √ | √ |
| | | | ➢ மாணவர் வாழ்க்கைக்கான பலம் | √ | √ | √ |
| | | | ➢ குறைவான கழிவுகளுடன் அழகான வாழ்க்கை | √ | √ | √ |

- மேற்கூறிய 02 துறைகளுக்கான தொகுதிகள் 2026 ஆம் ஆண்டு 6 ஆம் தரம் I ஆம் பருவத்திற்கு வழங்கப்படும், மேலும் 02 பாடவேளைகளில் ஒன்று உலகளாவிய ஆய்வுகளின் கீழ் தயாரிக்கப்பட்ட "பன்முகத்தன்மையில் வாழ்வது" தொகுதிக்கு பயன்படுத்தப்பட வேண்டும். மற்ற பாடவேளை "சமூகநல சேவை" தொகுதிக்கு பயன்படுத்தப்பட வேண்டும்.

- உலகளாவிய ஆய்வுகள் பாடத்துறை தொடர்பாக புவியியலில் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு தேசிய கல்வி நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் சமூகநல சேவை பாடத்துறை தொடர்பாக விஞ்ஞானம், குடியுரிமை கல்வி, கலை போன்றவற்றில் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- சமூகநல சேவை பாடத்துறையின் கீழ் பல தொகுதிகள் வழங்கப்படுவதுடன், "மனிதநேயப் பணி" எனும் பாடத்துறையை அறிமுகப்படுத்தும் தொகுதியுடன் பின்வரும் தொகுதிகளில் ஒன்றைத் தெரிவுசெய்ய வேண்டும், அதனுடன் பின்வரும் தொகுதியில் ஒன்றை ஒரு தவணைக்காக தெரிவுசெய்யப்பட வேண்டும்.

    - மனநிறைவான சிரிப்பிற்கு அன்பின் கரங்கள்.
    - மாணவர் வாழ்க்கைக்கான பலம்.
    - குறைவான கழிவுகளுடன் அழகான வாழ்க்கை

மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களின்படி நிலவும் வளங்களை அதிகபட்சமாகப் பயன்படுத்தி, 2026 ஆம் ஆண்டு 6 ஆம் தரம் முதல் மேலதிக ஆய்வுத் தொகுதிகள் மற்றும் மாற்றத் திறன் தொகுதிகளை செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தெரிவித்துக் கொள்கிறேன்.

teachmore.lk

நாலக்க கலுவெவ
செயலாளர்

பிரதிகள் :

1. அனைத்து மாகாண செயலாளர்கள்
2. அனைத்து கௌரவ ஆளுநர்களினதும் செயலாளர்கள்
3. அனைத்து மேலதிகச் செயலாளர்களும், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
4. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவனம்
5. பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைகள் திணைக்களம்
6. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
7. கல்விப் பணிப்பாளர், பாடசாலைச் செயற்பாட்டுக் கிளை, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
8. கல்விப் பணிப்பாளர், கல்வி அபிவிருத்தி, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
9. கல்விப் பணிப்பாளர், தரவுகள் முகாமை, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு